முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் நம்மாழ்வார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

22.08.2019, வியாழக்கிழமை

1. **கருமா வழி வந்த மக்களை**
   **கருமவினை போக்கி காத்திட**
   **ஆறுமுக அரங்க ஞானியாக வந்த**
   **அண்ணலே உன் பெருமை கூறி**
2. கூறியே நித்ய பிரசன்ன ஆசியை
   குறையிலா **விகாரி யாளி திங்கள்**
   **தெரிவிக்க பஞ்சதிகதி குருவாரம்**
   **(விகாரி வருடம் ஆவணி மாதம் 5ம் தேதி, 22.08.2019, வியாழக்கிழமை)**
   **தேசிகனுக்கு நம்மாழ்வார் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
   உலகமெங்கும் சரவணபவாய எனும்
   ஞான உபதேசம் செபதபமாகவே
   ஞான உலகமாக மாறுவது உறுதி
4. உறுதி கொண்டு அரங்கன் காட்டும்
   உண்மையான சன்மார்க்க நெறியுடன்
   தருமம் வளர்த்து காத்து மக்கள்
   தன்னார்வ தொண்டர்களாக மாறி வர
5. வருகவே மக்களிடை மாற்றம்
   வளமான மனநிலைகள் கூடி
   முருகனருள் தயவுக்குரிய நல்
   முழுமை ஞானமுடன் தருமவான்களாகி
6. ஆகியே உலக மக்களெல்லாம்
   அழியாமைக்கான தகுதி பெறுவர்
   அகிலம் வியக்க அரங்கன் சேவை
   ஆற்றலாக மக்களை தழுவி வர
7. வருகவே வையகம் இயற்கை பலம்
   வளரும் சன்மார்க்க ஞானபலம்
   ஆறுமுக அரங்க ஞானியை ஏற்கும்
   அருள்மிக்க நல்லுலகம் ஆகி
8. ஆகியே கலி இடர் என்கிற
   அனைத்துக் கொடூரங்களும் விலகி
   மகிழும்படி மக்களிடை பக்குவமும்
   மற்றவர்கள் மனம் நோகா செயல்பாடும்
9. செயல்பாடும் தரும சிந்தையும்
   சேவையும் நேர்மையான வாழ்வும்
   தயவும் பெருக வாழ்வு சிறந்து
   தரணியோர் எல்லா வகையும் ஏற்றம் கண்டு

10. கண்டுமே அரங்கஞானி தேடுகின்ற
கலியுக ஞானிகளுள் ஒருவராக
தொண்டு வழி சிறந்து உயர்ந்து
தேசிகனால் தேற்றம் கொள்ளப்படுவர்

11. தேற்றம் தரும் ஆறுமுக ஞானியே
தெய்வநெறி காட்டும் தவசியே
மாற்றம் உன் கொள்கை வழியே
மண்ணுலகே அடைவது உறுதி சடுதி நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் நம்மாழ்வார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம்**

மக்களெல்லாம் முன் செய்த பாவங்களான கர்மாவின் வழி வந்து, துன்பம் அடைந்திட்ட மக்களின் கர்மவினைகளை போக்கி காத்து ரட்சித்து அருள் செய்திட முருகப்பெருமானின் அவதாரமாக ஆறுமுக அரங்கமகா ஞானியாக அவதரித்திட்ட அருள் ஞானகுருவே சற்குருநாதனே அண்ணலே அற்புதமான உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் ஆவணி மாதம் 5ம் நாள் 22.08.2019, வியாழக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே நம்மாழ்வார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் நம்மாழ்வார்.

உலகமெலாம் முருகப்பெருமானின் மூலமந்திரமாகிய சரவணபவ எனும் மந்திரம் ஞானோபதேசம் ஜெதபமாக ஒலித்து வரவர, இந்த உலகம் ஞான உலகமாக மாறுவது உறுதியப்பா. மக்களே அரங்கனின் மீதும் அரங்கர் காட்டும் உண்மையான சன்மார்க்க நெறியுடன் தருமத்தினை வளர்த்து உலகினில் தர்மபலனை அதிகரித்து தர்மத்தை காத்து வருவதுடன் மக்களெல்லாம் சுயநலம் மறந்து பொதுநலம் மிக்கவராய் மாறி தன்னார்வ தொண்டர்களாக மாறி தொண்டுகளை செய்து வர, மக்களிடையே மாற்றங்கள் உண்டாகி வளமான சூழ்நிலையில் மக்களின் மனம் எல்லாம் மாறி, முருகப்பெருமானின் அருள் பெருகி தயவுக்குரியவர்களாக மாறி முழுமை ஞானமும் பெற்று தருமவான்களாக ஆகி உலக மக்களெல்லாம் அழிவிலாமைக்கான தகுதியை பெறுவர்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சேவைகள் உலகமெலாம் வியக்கும் அளவிற்கு பரவி அதிகரித்து உலக மக்களை அடைந்து வர, உலகம் இயற்கை பலம் வளர்ந்து பெருகும். உலகினில் சன்மார்க்க ஞானபலம் பெருகிடும், ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை ஏற்றுக் கொள்ளும் தேசமே அருள்மிக்க நல்தேசமாக மாறிடும். அரங்கரை ஏற்கும் உலகம் அருளுலகமாக மாறிடும். ஆறுமுக அரங்கரை ஏற்கும் உலகம் கலியுகத்தின் துன்பங்களெல்லாம் விலகி உலகினில் நிலவும், அனைத்துக் கொடூரங்களும் விலகி உலக மக்களெல்லாம் மகிழும்படி மக்களிடையே பரிபக்குவம் பெருகிடும். மற்றவர்கள் மனம் நோகாது மக்கள் செயல்பட்டு தருமசிந்தை பெருகி சேவை மனப்பான்மையுடன் வாழ்ந்து நேர்மையான வாழ்வினை வாழ்ந்து தயவு பெருகி அவர்களது வாழ்வு சிறப்படைந்து உலக மக்களெல்லாம் அனைத்து வகையிலும் சிறப்படைந்து முன்னேற்றம் அடைந்து ஆறுமுக அரங்கமகான் தேடுகின்ற கலியுக ஞானிகளில் ஒருவராக தகுதி பெற்று தொண்டுகள் மூலமாக சிறப்படைந்து உயர்வடைந்து ஆறுமுக அரங்கமகானின் அருளால் கடைத்தேற்றம் அடைவார்கள்.

கடைத்தேற்றம் தந்தருளும் ஆறுமுக அரங்கமகா ஞானியே தெய்வ நெறியைக் காட்டி வழிநடத்தும் மகா தவசியே உமது கொள்கைகள் மூலமாக இந்த மண்ணுலகமே உலகப் பெருமாற்றம் அடைவது உறுதியப்பா எனக் கூறுகிறார் மகான் நம்மாழ்வார்.

–சுபம்–